Rouge Valley HEALTH SYSTEM

The Scarborough Hospital

# றூஷ்வலி சுகாதாரத் திட்ட அமைப்பு மற்றும் ஸ்காபரோ மருத்துவமனை முன்மொழியப்பட்ட ஒன்றிணைப்புப் பற்றிய கேள்விகளும், பதில்களும் - *மார்ச் 2014*

## கேள்வி 1. ஏன் மருத்துவமனைகள் ஒன்றிணைய வேண்டும்?

பதில். இது மேலும் திறமையான நோயாளர் பராமரிப்புப் பற்றியதாகும். மருத்துவமனைகள் ஒன்றிணைவது ஸ்காபரோவிலும், மேற்கு டூறாம் பகுதியிலும் (ஏஜாக்ஸ், பிக்கரிங், விற்பி) எமது கவனிப்பிலுள்ள மக்களுக்கு மேலும் சிறந்த நோயாளர் பராமரிப்பை வழங்குவதற்கு இடமளிக்கும்.

குறுகிய காலத்தில், ஒன்றிணைவது என்பது உன்னதமான பராமரிப்பை நோயாளர்கள் இன்னும் துரிதமாக அணுகமுடியும் எனப் பொருள்படும். ஒன்றிணைக்கப்பட்ட ஒரு மருத்துவமனைச் செயற்திட்டமானது பராமரிப்பின் தரம் மற்றும் அணுகுதலை மேம்படுத்தவும், நோயாளர்கள் இலகுவாகச் சுகாதாரப் பராமரிப்புத் திட்டத்தைத் தேவைக்கேற்ப சரிவரப் பயன்படுத்தக்கூடியவாறு ஒருங்கிணைப்பு மற்றும் நிலைமாற்றத்தை மேம்படுத்தவும் எங்களுக்கு வழிவகுக்கும். இது எமது குறுக்கு-வளாக நோயாளர் பராமரிப்புத் திறனையும் மேம்படுத்தும்.

நீண்டகால அடிப்படையில், ஒன்றிணைவது என்பது வீட்டுக்கு அருகே உயர்தர நிபுணத்துவப் பராமரிப்பை வழங்குவதற்கு வழிவகுக்கும் மேலதிகச் சிறப்பு மையங்களையும், முதற்தரப் பிராந்திய செயற்திட்டங்களையும் உருவாக்குவதற்கு எமக்கு இடமளிக்கும். மேலும், அவசரம் இல்லாத பராமரிப்புச் சேவையை வழங்குவதில் மருத்துவமனை அவசரச் சிகிச்சைப் பிரிவுகளை விடச் சிறந்த நடமாடும் கவனிப்பு மையங்களை எங்களால் அமைக்கமுடியும்; அத்துடன் சேமிப்புகளை நோயாளர் பராமரிப்பை நோக்கித் திருப்புவதன் மூலம் எமது சுகாதாரப் பராமரிப்பு நிதி வளங்களைத் திறமையாகப் பயன்படுத்தமுடியும். ஓர் இணைக்கப்பட்ட மருத்துவமனைக் கூட்டுத்தாபனம் எமது சமூகங்களுக்கு மேலதிக விசேட மருத்துவ நிபுணர்களையும் கவர்ந்திழுக்கும்.

## கேள்வி 2. TSH ம் RVHS ம் ஒன்றிணைவது, எப்படி ஸ்காபரோ மற்றும் மேற்கு டூறாம் பகுதியில் சுகாதாரப் பராமரிப்புக்கு உதவமுடியும்?

பதில். ஒன்றிணைவது எமது சமூகங்கள் அணுகக்கூடிய திறமையான தரம்மிக்க சேவைகளை உருவாக்குவதுடன் மேலதிக விசேட மருத்துவ நிபுணர்களையும் கவர்ந்திழுக்கும். முன்மொழியப்பட்ட ஒன்றிணைப்பு, எமது நோயாளர்களுக்கு வழங்கும் சேவைகளை நன்கு ஒழுங்குசெய்யும் திறனை எங்களுக்கு வழங்குவதுடன் மகப்பேறு/குழந்தை வைத்தியம், புற்றுநோய்ச் சிகிச்சை, சிறுநீரக மருத்துவம், நோய்த் தணிப்புப் பராமரிப்பு, பிந்திய கடும் பராமரிப்பு முதலிய சேவைகளுக்காக உலகத் தரம் வாய்ந்த சிகிச்சைப் பராமரிப்பை நாங்கள் நோயாளர்களுக்கு வழங்குவதற்கு இடமளிக்கும். வேறுவிதமாகக் கூறுவதாயின், மக்களால் கூடிய சீக்கிரம் அதிசிறந்த பராமரிப்பை அணுகமுடியும்.

ஒன்றிணைக்கப்பட்ட RVHS-TSH ஆனது ஒன்ராறியோவில் கூடிய பொது விவரங்களைக் கொண்டிருப்பதுடன் நல்ல தாக்கத்தையும் உண்டுபண்ணும். இது ஒன்ராறியோவின் ஏழாவது மிகப் பெரிய ஒன்றிணைக்கப்பட்ட மருத்துவமனைக் கூட்டுத்தாபனம் ஆகும். அதிகளவு நோயாளர்களுக்கு மேலும் சிறந்த பராமரிப்பு வழங்குவதற்காக ஒரு பெரிய வரவு செலவுத் திட்டத்தை நாம் வைத்திருப்போம் என்பது இதன் அர்த்தமாகும். வருடாந்தம் நாங்கள் மேற்கொள்ளும் அறுவைச் சிகிச்சைகளில் முதலிடத்திலும், அவசர வருகைகளில் இரண்டாவதாகவும், மனநலச் சிகிச்சை, புனர்வாழ்வு மற்றும் சிக்கலான தொடர் பராமரிப்பு ஆகிய சேவைகளுக்கான உள்நோயாளர் நாட்களில் முதல் 25 ஸ்தானங்களுக்குள்ளும் இருப்போம்.

## கேள்வி 3. நடைபெறவிருக்கும் தேர்தல், நீங்கள் ஒன்றிணைவீர்களா, இல்லையா என்பதில் எந்த ஒரு தாக்கத்தையும் ஏற்படுத்துமா?

பதில். ஒரு தேர்தலின் தாக்கம் எப்படியிருக்கும் என்பது எங்களுக்குத் தெரியாது. ஆனால், தேர்தலின் முடிவு எப்படியிருந்தாலும், எங்களை எதிர்நோக்கும் சவால்கள் மாறாதிருக்கும் என்பது எங்களுக்குத் தெரியும்.

முன்மொழியப்பட்ட ஒன்றிணைப்புப் பற்றி நாங்கள் கவனத்திற்கொள்ளும் விடயங்கள் உள்ளடக்குபவை:

LEADING FOR PATIENTS

- பராமரிப்புக்குச் சீரற்ற அணுகுதல், தற்போது, ஸ்காபரோ மற்றும் மேற்கு டுறாம் பகுதியில் சேவைகளும், மருத்துவ நிபுணத்துவச் சேவைகளும்;
- வளர்ந்துவரும் நோயாளர் கோரிக்கைகள், முதுமையடைந்துவரும் சனத்தொகை மற்றும் குறைக்கப்பட்ட மருத்துவமனை நிதியுதவி ஆகியவற்றைக் கவனத்திலெடுப்பதற்குரிய சுகாதாரச் சேவைத் திட்டத்தின் அடிப்படை மறுசீரமைப்புக்கான தேவை;
- மாகாணக் கீழ்மட்ட நிதியுதவிக்கு உட்படாத வருடாந்த மூன்று முதல் ஐந்து வீதம் வரையான பணவீக்கச் செலவு அழுத்தங்கள் மருத்துவமனைகளுக்கு உள்ளன;
- ஸ்காபரோவிலுள்ள பழமையடைந்து வரும் மருத்துவ வளாகங்களைப் பராமரித்தலும் மேற்கு டுறாம் பகுதியிலுள்ள வளாகங்களின் பற்றாக்குறையும்.

முன்மொழியப்பட்ட ஒன்றிணைப்புடன் முன்நோக்கிச் செல்லும்போது, ஸ்காபரோவிலும் மேற்கு டுறாம் சமூகங்களிலும் நோயாளர்களுக்கு நாங்கள் வழங்கும் பராமரிப்பைத் தொடர்ந்தும் மேம்படுத்துவதில் நாங்கள் கவனம் செலுத்துகின்றோம். எமது சமூகங்களுக்கு நாங்கள் செவிமடுப்பதுடன், எமது சமூகத்தினருக்குச் சுகாதாரப் பராமரிப்பை வழங்குவதற்கு எது சிறந்தது என்பது பற்றி மையக் கிழக்கு உள்ளகச் சுகாதார வலையாக்கத்திற்கும் (மையக் கிழக்கு LHIN), சுகாதாரம் மற்றும் நீண்ட காலப் பராமரிப்பு அமைச்சுக்கும் ஆலோசனை வழங்கிவிட்டுத் தேர்தல்கள் பற்றிய கலந்துரையாடலை அரசியல்வாதிகளிடம் விட்டுவிடுவோம்.

### கேள்வி 4. ஒன்றிணைவதற்கான உங்கள் கோரிக்கையை அமைச்சு நிராகரித்தால் நீங்கள் என்ன செய்வீர்கள்?

பதில். இந்த இரண்டு மருத்துவமனைக் கூட்டுத்தாபனங்களையும் இணைப்பது, நாங்கள் சேவை வழங்கும் நோயாளர்களுக்கும் சமூகங்களுக்கும் எவ்வாறு பயனளிக்கும் என்பதை விபரித்து ஒரு வலுவான நிலைப்பாட்டை முன்வைத்துள்ளோம். இந்த ஒன்றிணைப்பு, பராமரிப்புத் தரத்தையும் அணுகுதலையும் தொடர்ந்து முன்னேற்றுவதற்கு இடமளிக்கும். அந்த நிலைப்பாட்டை முன்னெடுத்துச் செல்வதற்கு நாங்கள் முழுக் கவனத்தையும் செலுத்துகின்றோம். எமது சமூகங்களுடன் இணைந்த இத் தகவல், பகுப்பாய்வு மற்றும் பங்குதாரர்களை ஈடுபடுத்துதல், குறுகியகால மற்றும் நீண்டகாலச் சுகாதாரப் பராமரிப்புச் சேவைகளைத் திட்டமிடுவதில் பெறுமதியுடையதாக இருக்கும்.

### கேள்வி 5. மருத்துவமனைகள் தமது சமூகங்களுக்கு மேலும் திறமையுடன் சேவைசெய்வதற்காக தமது வசதிகளை நவீனமயப்படுத்துவதற்கும், விஸ்தரிப்பதற்கும் என்ன நடவடிக்கைகளை எடுத்துள்ளன?

பதில். நாங்கள் மூலதனத்திற்கு முந்திய விண்ணப்பங்களைச் சுகாதாரம் மற்றும் நீண்ட காலப் பராமரிப்பு அமைச்சுக்குச் சமர்ப்பித்துள்ளோம். ஸ்காபரோவுக்கு ஒன்றும், மேற்கு டுறாம் பகுதிக்கு ஒன்றுமாக (ஏஜாக்ஸ், பிக்கரிங், விற்பி ஆகியவற்றிற்குச் சேவைபுரியும்) இரண்டு வளாகத் திட்டங்களைத் தொடர்ந்து நிறைவேற்றுதல், வடிவமைத்தல், நிர்மாணித்தல் போன்றவற்றுக்குத் தேவைப்படும் நிதியுதவியைப் பெறுவதற்கு இவ்விண்ணப்பங்கள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. பல ஆண்டு, பல கட்டச் செயல்பாட்டில் இதுவே முதற்படி. ஆனால் அது, எமது சமூகங்களின் நோயாளர் பராமரிப்புத் தேவைகளைப் பூர்த்திசெய்வதற்காக எமது வளாகங்களை நவீனமயப்படுத்துவதற்கும், விஸ்தரிப்பதற்கும் அவசியம் தேவைப்படும், அரசாங்க முதலீடுகளைப் பெற்றுக்கொள்ளத் தொடங்குவதற்கு அவசரமாகத் தேவைப்படும் ஒன்றாகும். இது ஒரு நீண்ட செயற்பாடு, ஓரிரவில் நடைபெறப்போவதில்லை. எமது முன்னேற்றம் பற்றி எமது பங்குதாரர்களுக்கு அறியத்தருவோம்.

### கேள்வி 6. றூஷ்வலி ஏஜாக்ஸ் மற்றும் பிக்கரிங் (RVAP) ஏன் லேக்றிட்ஜ் சுகாதார சேவைத் திட்டத்துடன் ஒன்றிணையவில்லை?

பதில். முன்மொழியப்பட்ட RVHS மற்றும் TSH ஒன்றிணைப்பு, நோயாளரது விருப்புக்களையும், நோயாளர்களது மருத்துவர்களுக்கான பரிந்துரைப்புகளையும் கவனத்திற் கொள்கின்றது. பெரும்பாலான நோயாளர்கள் தமது பராமரிப்பை RVAP இல் பெற்றுக்கொள்கின்றனர் அல்லது லேக்றிட்ஜ் சுகாதாரச் சேவைத் திட்டத்திற்காகக் கிழக்கே செல்வதை விட்டுவிட்டு ரொறன்ரோவின் மேற்குப் பக்கமாகச் செல்கின்றனர். TSH மற்றும் RVHS இல் உள்ள மருத்துவர்கள் முன்மொழியப்பட்ட RVHS மற்றும் TSH ஒன்றிணைப்பைத் தீவிரமாக ஆதரிக்கின்றனர். லேக்றிட்ஜ் சுகாதாரச் சேவைத் திட்டத்துடன் மேலும்

ஒன்றாக இணைந்து செயற்படுவதென்பது எதிர்காலத்தில் நாங்கள் மேலும் நிச்சயம் ஆராயும் ஒன்று, ஆனால் RVHS மற்றும் TSH ஒன்றிணைப்பு நோயாளர்களுக்கு உடனடியாகவும், காலப்போக்கிலும் பயனளிக்கும் என்று உண்மைகள் விளக்குவதால், நாங்கள் அதன்மீது கவனம் செலுத்துகின்றோம்.

**கேள்வி 7. இந்த மருத்துவமனைகளில் எவ்வளவு வேலை தேவைப்படுகிறது என்ற அடிப்படையில், நோயாளர்களுக்கு உடனடியாகக் கண்ணியமான தரப் பராமரிப்பு கிடைக்கின்றதா?**

பதில். ஆம், நிச்சயமாக. TSH மற்றும் RVHS உன்னதப் பராமரிப்பை வழங்குகின்றது. TSH மற்றும் RVHS ஆகியவை எமது நோயாளர்கள், ஊழியர்கள் மற்றும் சமூகத்தின் நல்வாழ்வுக்காகத் தம்மை அர்ப்பணித்திருக்கும், உயர்வாக மதிக்கப்படும் இரண்டு மருத்துவமனைகள் ஆகும். நோயாளர் பராமரிப்பில் அதியுயர் திறமைக்காகத் தம்மை அர்ப்பணித்துள்ளார்கள் என்பதை எடுத்துக்காட்டும் ஒரு நாலாண்டு முன்மாதிரியான நிலையை, இரண்டு மருத்துவமனைகளும் Accreditation Canada இடமிருந்து வென்றெடுத்துள்ளன. இச்சிறப்புச் சாதனையை நிலைநாட்டவும், மேலும் கட்டியெழுப்பவும் உறுதிபூண்டுள்ளோம். எமது மருத்துவமனைகள் ஒன்றிணைந்து, தற்போது நடைமுறையிலிருக்கும் செயற்திட்டங்களைப் பலப்படுத்தவும், உயர்தர நிலையங்கள், சிகிச்சை நிலையங்கள் மற்றும் ஏனைய சேவை வழங்குநர்களுடன் பங்காளர்களாக இணைந்து புதிய அல்லது நீடிக்கப்பட்ட சேவைகளை முன்னேற்றவும் முடியும்.

**கேள்வி 8. அரசாங்கம் புதிய மருத்துவமனைக் கட்டிடங்களைக் கட்டுவதற்கு உங்களுக்கு அனுமதி வழங்கினால், நான்கு மருத்துவமனை வளாகங்கள் அத்துடன் நான்கு அவசர சிகிச்சைப் பிரிவுகள் பற்றி நீங்கள் குறிப்பிட்ட உறுதிமொழிகளுக்கு என்ன நடக்கும்?**

பதில். அந்த அரசாங்கத் தீர்மானம் எடுக்கப்பட்டால், எடுக்கப்படும்போது அப்படியான அங்கீகாரம் மிகவும் வரவேற்கப்படும். மேற்கு டூறாம் பகுதியிலுள்ள இரு சமூகங்கள் மற்றும் ஸ்காபரோவிலுள்ள ஒரு சமூகத்தில் உள்ள எமது மருத்துவமனை வளாகங்களை நவீனமயப்படுத்துவதன் மூலமும், விஸ்தரிப்பதன் மூலமும் எமது சமூகங்களுக்கு மேலும் சிறந்த சேவை கிடைக்கும். அந்த வளாகங்களுக்கான முதலீடுகள் மாகாண அரசினால் அங்கீகரிக்கப்பட்டு, அவ்வளாகங்கள் கட்டப்பட்டுத் திறந்துவைக்கப்படும் வரை, தற்போதிருக்கும் நான்கு மருத்துவமனைக் கட்டிடங்களையும், அவற்றின் அவசரச் சிகிச்சைப் பிரிவுகளையும் நாம் தொடர்ந்தும் பராமரித்துக்கொண்டிருப்போம். அதேவேளை, எல்லா மருத்துவமனை வளாகங்களிலுமுள்ள எல்லா நோயாளர் சேவைகளிலும் உயர்தரப் பராமரிப்புக்காக நாங்கள் தொடாந்து திடமாக உறுதிபூண்டுள்ளோம்.